ஸ்ரீ

கடவுள் துணை.

# பதிப்புரை.

க. நூற்றெட்டுத்திருப்பதியகவல்.—"ஈரிருபதாஞ் சோழ
மீரொன்பதாம் பாண்டி, ஓர்பதின்மூன்று மலைநா டோரிரண்
டாஞ் - சீர்நடுநா, டாறுமிரெட்டு தொண்டை யவ்வடநா
டாறிரண்டு, கூறுதிருநா டொன்றாக் கொள்" என்று திவ்
வியகவி பிள்ளைப்பெருமாளையங்கார் அ[illegible]ரிச்செய
சோழநாட்டுத்திருப்பதிகள் நாற்பதும், பாண்டியம
திருப்பதிகள் பதினெட்டும், மலைநாட்டுத்திருப்பதிகள் பதின்
மூன்றும், நடுநாட்டுத்திருப்பதிகள் இரண்டும், தொண்
டைநாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டும், வடநாட்
டுத்திருப்பதிகள் பன்னிரண்டும், திருநாடு ஒன்றுமாகத்
திருமால் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்குஞ் சிற
ந்ததலங்களென ஆழ்வார்களருளிச்செயல்களிற் காணப்படு
கின்ற நூற்றெட்டுத் திவ்வியதேசங்களின் திருநாமத்தையும்,
புராணஸ்தலங்களென்று பிரசித்தமான ஆறு திருப்பதிக
ளின் திருப்பெயரையும் பெரும்பாலும் அடைமொழியில்
லாதபடி அடுக்கி, அவையனைத்திலும் பெரியபிராட்டியா

ருடன் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாராயணன் எளியேன் மனத்திலும் வீற்றிருந்து உலகத்தை அளித்தருள்கவென்று வாழ்த்திய ஐம்பத்தொன்பது அடிகள் கொண்ட நேரிசையாசிரியப்பாவா யமைந்தது, இப்பிரபந்தம்; எம்பெருமான் உயிர்களையுய்வித்தற்பொருட்டு எழுந்தருளியிருக்குந் திவ்வியதேசங்க ளெல்லாவற்றையும் ஒருங்குகூறிய திருப்பதிக்கோவையாகிய இந்தஆசிரியப்பா, சகலபாகவதர்களும் தினந்தோறும் பாராயணஞ்செய்தற்கு உரிய தென்பது வெளிப்படை. இவ்வகவல், இராமநாதபுரமுதலிய இடங்களில் ஸ்ரீவைஷ்ணவர்பலர்க்கு வாய்ப்பாடமாயுள்ளது.

உ. **மணவாளமாமுனி நூற்றந்தாதி.** — எம்பெருமானார் விஷயமாகத் திருவரங்கத்தமுதனாரருளிச்செய்த இராமாநுச நூற்றந்தாதிபோல, ஸ்ரீமணவாளமாமுனிகள் விஷயமான ஸ்தோத்திரரூபமாக அந்தாதித்தொடரா லமைந்த நூற்றெட்டுக் கட்டளைக்கலித்துறைகளை யுடையது, இப்பிரபந்தம்; மணவாளமாமுனிகளுடைய ஒப்புயர்வற்ற அநந்தமான வைபவங்களைப் பலபடியாலும் வெளியிடுவதோடு, அந்தஆசாரியர்பக்கல் தமக்கு உள்ள பிரேமாதிசயத்தை நூலாசிரியர் ஈடுபாட்டுடனே தமது நிஷ்டையைக் கூறுமுகத்தாலும் பிறர்க்குஉபதேசஞ்செய்யுமுகத்தாலும் எடுத்துரைக்கப்பெற்றது; சொற்செறிவும் பொருட்பொலிவும் ஆழ்ந்தகருத்தும் வாய்ந்து தெள்ளிய இனிய நன்னடை யுடையது. "மணவாளமாமுனியை யினியொப்பார்களில்லை யுலகேழினு மும்பரூரினும்" என்றபடி உபயவிபூதியிலும் உபமானமில்லாத ஆசாரியவர்யரான மணவாளமாமுனிகளுடைய ஸகலலோகஸமுஜ்ஜீவநஹேதுவான திருநாமத்தைப் பாட்டுத்தோறும்அமைத்து நூற்றெட்டுப்பாசுரமாகஅருளிச்செய்திருத்தலால், பிரபந்நகாயத்திரியென்னும் இராமாநுச

நூற்றந்தாதிபோலவே இதுவும் எம்பெருமானார்தரிசனத்தி லுள்ளார் நித்தியம் அநுஸந்திக்கத் தக்கது.

இந்தஇரண்டுநூல்களையும் இயற்றிய மகான், இராமநாதபுரம் - **சதாவதானம்** - **முத்துசாமி**யையங்கா ரென வழங்கிய **அனந்தாழ்வா** னென்பவர்; (இத்திருநாமங்களை முக்திஸ்வாமியய்யங்கா ரென்றும், அநந்தாரிய ரென்றுங் கூறுவது முண்டு: இவர்பெயர் சேஷாத்ரிசர்மா வென்றுங் கூறுவர்.) இவர், இராமநாதபுரஸம்ஸ்தானத்திற் சின்னபிரதானியாயிருந்த ஸ்ரீ கிருஷ்ணையங்காருடைய பிரபௌத்திரர்; ஸ்ரீ சேஷாத்ரியையங்காருடைய பௌத்திரர்; வங்காருசாமியையங்கா ரென வழங்கிய ஸ்ரீ நாராயணையங்காருடைய குமாரர்; இப்பொழுது மதுரைச்செந்தமிழ்ப்பத்திராசிரியராகிய ஸ்ரீ. உ. வே. மு. இராகவையங்காருடைய தந்தை; இராமநாதபுரம் ஸம்ஸ் தா ன வி த் வா னா யி ரு க் கி ற ஸ்ரீ. உ. வே. ரா. இராகவையங்கார்க்கு மாதுலர்: வடமொழிதென்மொழிகளில் தேர்ந்து நால்வகைக்கவிகளையும் பாடுந்திறத்தினராகிக் கண்டவர்கேட்டவர்வியக்குமாறு பற்பலஇடங்களில் விசித்திரசதாவதானமுஞ்செய்து அதிப்பிரசித்திபெற்றவர்; இராமநாதபுரம் ஸம்ஸ்தானவித்துவானாயிருந்தவர்; ஸ்ரீவைஷ்ணவசம்பிரதாயக்கிரந்தங்களில்ஆழ்ந்த பரிசயமுடையவர்.

மேற்குறித்த கிருஷ்ணையங்கார், கி. பி. 1763-முதல் 1795 - வரை இராமநாதபுரத்தில் அரசாட்சிசெய்த முத்துராமலிங்கசேதுபதி மகாராஜாவினிடம், பெரியபிரதானியாகிய முத்திருளப்பப்பிள்ளையை யடுத்து, சின்னபிரதானியாய் விளங்கியவர்; இவரது சிலையுருவம், இராமேசுவரத்திற் சொக்கட்டான்சேரிமண்டபத்தில் இப்பொழுதும் இருக்கின்றது.

இவருடைய குமாரர் சேஷாத்ரியையங்கார். அவரது புதல்வராகிய பங்காருஸ்வாமியையங்காருடைய புத்திரர்கள், ஸ்ரீ. உ. வே. அஷ்டாவதானம் - கிருஷ்ணையங்காரும், சதாவதானம் - முத்துசாமியையங்காரு மென இருவர். இவர்களில் மூத்தவர், வடமொழிதென்மொழிகளில் வல்லவராய், சேதுஸம்ஸ்தானவித்வானாகி, இராமநாதபுரஜமீந்தாரேஜராயிருந்த ஸ்ரீமான் - பொன்னுசாமித்தேவருடைய பேரவையில் விளங்கிய வித்வந்மணிகளுள் ஒருவராய் வீற்றிருந்தனர். இளையவரே, இங்குக்குறித்த நூல்களின் ஆசிரியர்.

இவர், மிக்கஇளமையிலேயே தமிழ்ப்புலமையும் அவதானசக்தியும் மிகவாய்ந்து, மைசூர்க்குச் சென்று, அங்கு அப்பொழுது ஆட்சிபுரிந்த ஸ்ரீகிருஷ்ணராஜ வுடையாரது முன்னிலையிற் கன்னடபாஷையில் அநேகஅவதானங்கள் நடத்தித் தமது புலமைத்திறத்தைக் காட்டி அவ்வரசராற் பெரும்பரிசுகளளிக்கப்பெற்றனர். பெருமாள்கோவிலெனப் படுகிற காஞ்சீபுரத்திற் சதுஸ்ஶாஸ்திரபண்டிதராயிருந்த திருப்புட்குழி அப்பாவென்னும் மஹாமஹோபாத்தியாய ஸ்ரீகிருஷ்ணதாதாசாரியர் முதலிய மகாவித்வான்களின் ஸந்நிதியிலும், திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர்முன்னிலையிலும், மற்றும் சென்னபட்டணம் முதலிய பலஇடங்களிலும் இவர்செய்தஅவதானங்கள் மிகவியக்கத்தக்கன வென்றும், திரிசிரபுரம் - மகாவித்வான் மீநாக்ஷிசுந்தரம்பிள்ளைமுதலியோராற் பற்பலசிறப்புக்கவிகள்பாடிச் சிலாகிக்கப்பெற்றவ ரிவ ரென்றுந் தெரிகிறது. ஒருகால் இவர் இராமநாதபுரத்து ராஜஸபையில் அவதானஞ்செய்து கொண்டிருந்தபொழுது ஒருவித்வான் திருவாய்மொழிப் பாசுரமொன்றை யெடுத்துக்கொண்டு அக்ஷராவதானங்

